செ.வெ.எண்: 47/மே நாள்: 28.05.2018

# பத்திரிக்கை செய்தி

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) சேர்க்கை அறிவிப்பு

தருமபுரி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இவ்வாண்டு ஆகஸ்ட் 2018-ம் ஆண்டு முதல் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**வயதுவரம்பு :**

14 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள். பெண்களுக்கு குறைந்த பட்ச வயது 14 உச்ச வயது வரம்பு இல்லை.

**கல்விதகுதி :**

8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க தகுதியுள்ள பிரிவு:
கம்பியாள் (WIREMAN) (SCVT) (2 வருடம்)

10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் : கம்பியூட்டர் ஆப்ரேட்டர் அன்டு புரோகிராமிங் அசிஸ்டண்ட் (COPA) (1 வருடம்), கட்டிட பட வரைவாளர் (DRAUGHTSMAN CIVIL) (2 வருடம்). மின்பணியாளர் (ELECTRICAN) (2வருடம்), பொருத்துநர் (FITTER) ( 2 வருடம்). கம்மியர் மோட்டர் வண்டி (MOTOR MECHANIC VECHILE) (2வருடம்), கம்மியர் டீசல் என்ஜின் (MECHANIC DIESEL ENGINE) (1 வருடம்), கடைசலர் (TURNER) (2வருடம்), இயந்திர வேலையாள் (MACHINIST) (2வருடம்) மற்றும் பற்றவைப்பவர் (Welder) ( 1 வருடம்) ஆகிய தொழிற் பிரிவுகளுக்கு ஆண். பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்கண்ட தொழிற் பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் கண்ட இணையதள முகவரியில் 27.06.2018-க்குள் விண்ணப்பித்து கலந்தாய்வுக்கு வரும் போது விண்ணப்பித்த விண்ணப்பம், சலான் மற்றும் அசல் சான்றிதழ்கள் கொண்டு வரகேட்டுக்கொள்ளப்படுகிறது.

www.skilltraining.tn.gov.in இது மாவட்ட அளவில் நடத்தப்படும் கலந்தாய்வுக்கான விண்ணப்பம் ஆகும். அனைத்து மாவட்டங்களிலும் சேர்க்கைஆனது கலந்தாய்வு மூலம் ஒரே நாளில் நடத்தப்படும் விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் விண்ணப்பிக்க விரும்பினால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். இதர விவரங்கள் அனைத்தும் www.skilltraining.tn.gov.in மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

பயிற்சிகாலத்தின் போது பயிற்சியாளர்களுக்கு மாதந் தோரும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்கப்படும், இதைதவிர விலையில்லா பாடபுத்தகம், விலையில்லா வரைபட கருவிகள்,விலையில்லா மடிகணினி, விலையில்லா சீருடை, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா பேருந்துபயண அட்டை, விலையில்லா மூடு காலணி முதலிய சலுகைகள் வழங்கப்படும். ஆண் பயிற்சியாளர்களுக்கு விடுதி வசதி உண்டு. (பிற்பட்டோர் நலத்துறை விடுதி மூலமாக), தகுதியுள்ள அனைத்து மாணவ, மாணவியர்களும் தருமபுரி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயன் அடையுமாறு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், தருமபுரி. தொலைபேசி எண். 04348 - 235323 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு என முதல்வர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஏ.வி.ஜெகநாதன்., டிஎம்இ., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**